ARAN International e-Journal of Tamil Research

# அரண்


பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X




காலாண்டு இதழ்

(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)

ஆகிய மாதங்களில் வெளிவரும்


*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in



Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

*+917299587879*

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பொதிகைமலையின் ஆயண்டிரன்
முனைவர் த. முத்துலட்சுமி

பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்
கி.தமிழரசி

பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்
ம.கலைச்செல்வன்

இலக்கியங்களும் பசிப்பிணியும்
முனைவர் ப. மணிகண்டன்

அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்
முனைவர் அ.புஷ்பா

கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்
கு.நிவேதா

மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு
முனைவர் ஈ இசக்கியம்மாள்

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.
(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)
திரு. விசுமாப்போடி சசிகரன்

பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி
முனைவர் வே.இரவி

கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்
முனைவர் அ. மதலேன்

சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்
முனைவர்அ. அமுல்ராஜ்

பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# Pandia ports

**K.Tamilarasi** (Ref.No.: 36736/Ph.D.K8/Tamil/Full Time/January 2017/Confirm./Dt: 24.04.2019)Research Scholar, Department of Tamil, Govt. Arts College for Women (Autonomous), Kumbakonam-612 001, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University) ORCiD: https://orcid.org/0009-0007-2563-0980

**Dr. P.Senthilkumari,** Research Advisor — Associate Professor, Department of Tamil, Govt. Arts College for Women (Autonomous), Kumbakonam-612 001, Tamil Nadu, India (Affiliated to Bharathidasan University)

*Abstract*

*During the Sangam period, maritime trade has been held. Shipping has been better than the sea trade in the ancient Tamil Nadu. The governments of that time have set up portfolio in every country where they have ruled for maritime trade. Often portfares of rivers were placed on the faces of the Bugar. This article examines the ports and resources in the Sangam Pandya country.*

**Keywords:** *Korakai, Marungurupattinam, Thondi, Kumari, Vigyam.*

## பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்

**கி.தமிழரசி** (Ref.No.: 36736/Ph.D.K8/Tamil/Full Time/January 2017/Confirm./Dt: 24.04.2019) , முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்-612 001, தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**முனைவர் ப.செந்தில்குமாரி,** ஆய்வு நெறியாளர் - இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்-612 001, தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலத்தில் கடல்வழி வாணிகம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. பழந்தமிழகத்தில் தரை வாணிகத்தைவிட கடல் வாணிகம் அதிக செலவில்லாமலும், விரைவாகவும் நடந்தபடியால் கப்பல் வாணிகம் சிறப்பாக நடந்துள்ளது. அக்கால அரசர்கள் கடல் வாணிகம் நடைபெறுவதற்கு தான் ஆட்சி செய்த ஒவ்வொரு நாட்டிலும் துறைமுகப்பட்டினங்களை அமைத்துள்ளனர். பெரும்பாலும் துறைமுகப்பட்டினங்கள் ஆறுகள் கடலில் சேர்கிக்ற புகர் முகங்களில் அமைக்கப்பட்டிருந்தது. இந்நோக்கில் சங்ககால பாண்டிய நாட்டில் அமைந்திருந்த துறைமுகங்களும் அவற்றின் அமைவிடம், வளங்கள் ஆகியன குறித்து இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**திறவுச் சொற்கள்:** கொற்கை, மருங்கூர்ப்பட்டினம், தொண்டி, குமரி, விழிஞம்.

**முன்னுரை**

சங்க காலத்தில் தமிழரசர்கள் தங்களுடைய நாநட்டில் வணிகர்க்கு ஊக்கமளித்து வாணிகத்தை வளர்த்துள்ளனர். அவர்கள் தங்களுடைய நாடுகளில் வாணிகம் சிறப்பாக நடைபெறுவதற்கும் ஏற்றுமதி, இறக்குமதி செய்யவும் சிறந்த துறைமுகங்களை அமைத்தனர். துறைமுகம் என்பது கப்பல்கள் மற்றும் படகுகள் வந்து தங்கி செல்வதற்குரிய இடமாகும். இங்கு கப்பல்களுக்கு வேண்டிய பொருட்கள், தொழிலாளர்கள் இருப்பிடம் அமைக்கப்பட்டிருக்கும். துறைமுகங்கள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் பெரும் பங்கு வகுக்கிறது. பண்டக சாலையிலிருந்து பலவித பொருட்களை ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கு கடல்வழிப் போக்குவரத்தின் மூலம் எடுத்துச் செல்ல துறைமுகங்கள் பெருவழிகாட்டியாக இருந்திருக்கின்றன. இதனால் நாட்டின் பொருளாதாரம் உயர்ந்து வளம் செழித்து மக்கள் நல்வாழ்வைப் பெற்றனர். பழந்தமிழர்களின் வாழ்க்கையில் ஒரு பகுதி வாணிகத்தையே சார்ந்திருந்தது. இவ்வாணிகம் உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம் என இருமுறையாக நடந்துள்ளது. இத்தகைய வாணிகமுறை மேலோங்க இன்றியமையாமையாக இருந்த பாண்டிய நாட்டு துறைமுகங்களான கொற்கை, மருங்கூர்ப்பட்டினம், தொண்டி, குமரி, விழிஞம் போன்றவற்றை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**கொற்கை**

சங்க கால பாண்டிய நாட்டின் முக்கிய துறைமுகமாகக் கொற்கை விளங்கியுள்ளது. மருங்கூர்ப்பட்டினத்துக்குத் தெற்கில் கொற்கைக் குடாக் கடலும், மேற்குக் கரையில் கொற்கைப்பட்டினமும் இருந்தது. இவ்வூர் இப்பொழுது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளது. சங்க காலத்திலுள்ள கொற்கைக் குடாக் கடலில் தாமிரபரணியாறு சென்று கலந்துள்ளது. சங்க காலத்தில் இருந்த கொற்கை துறைமுகம் இருந்த பகுதி இப்பொழுது மாறமங்கலம் என அழைக்கப்படுகிறது.

> “கொற்கைப்பட்டினம் இருந்த இடம் இப்பொழுதுள்ள கடற்கரைக்கு மேற்கே மூன்று மைல் தூரத்தில் மாறமங்கலம் என்னும் பெயர் பெற்றிருக்கின்றது.” (அ.இராகவன், கோநகர் கொற்கை, ப.25)

தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கொற்கையில் கண்டெடுத்த பொருட்களை பம்பாய் டாட்டா சோதனை நிலையத்திற்கு அனுப்பி ஆய்வு செய்ததன் மூலம் இக்கொற்கைப்பட்டினம் கி.மு.285வது ஆண்டைச் சேர்ந்தது என்று உறுதி செய்கின்றனர்.

கொற்கையை தலைநகராகக் கொண்டு வெற்றிவேற்செழியன் பசும்பூண்பாண்டியன் என்னும் பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். வெற்றிவேற்செழியன் கொற்கையினை ஆட்சி செய்ததை சிலப்பதிகாரம்,

*கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன்* (சிலம்பு., வேனிற்காதை)

எனவும், பசும்பூண் பாண்டியன் கொற்கையின் தலைவன் என்பதனை அகநானூறு,

*பேர் இசைக் கொற்கைப் பொருநன், வென்வேல்*

*கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்* (அகம்.125)

எனவும் குறிப்பிடுகின்றது. வெளிநாட்டார்கள் இன்றுள்ள மன்னார் வளைகுடா என்பதனை கொல்கை வளைகுடா என்றழைத்துள்ளனர்.

கி.பி.80இல் நமது நாட்டுக் கடற்கரையினை பார்வையிட்ட கிரேக்கர் தனது பெரிப்புளூஸ் என்னும் பயணநூலில் கொற்கையை "கெல்கிஸ்" என்று குறிப்பிட்டுள்ளார். சங்க காலப் பாண்டிய நாட்டில் கொற்கை முத்துக்குளித்தலுக்கு முதன்மையான துறைமுகமாய் விளங்கியுள்ளது. அத்துறைமுகத்தில் பணியாற்றிய பெரும்பாலானோர் சிறைக் கைதிகளாக இருந்துள்ளனர். அவர்கள் முத்துக்குளித்தலையும் சங்கு அறுப்பதையும் தொழிலாக செய்துள்ளனர்.

> "கொற்கை என்பது கன்னியாகுமரிக்கு அப்பால் உள்ள துறைமுகம். அங்கு முத்தெடுக்குந் தொழில் நடைபெறுகிறது. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் அத்தொழிலைச் செய்கின்றார்கள். கொற்கை பாண்டி நாட்டைச் சேர்ந்தது" (அ.இராகவன், கோநகர் கொற்கை, 37)

என பெரிப்புரூஸ் எனும் நூல் கூறுவதாக கே.ஏ.என். சாஸ்திரி தென்னிந்திய வரலாறு எனும் நூலில் குறிப்பிட்டிருப்பதாக அ.இராகவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொற்கை சிறப்புமிக்க நகரமாக விளங்கியதால் சங்க காலப் புலவர்கள் தாம் பாடிய பாடல்களில் கொற்கையினை சிறப்பித்து பாடியுள்ளனர். அதுவும் கொற்கைத் துறைமுகத்தில் விளையும் முத்தினை குறித்த செய்திகளையே அதிகமாக குறிப்பிட்டுள்ளனர்.

கொற்கையில் முத்தெடுப்பவர்களும், சங்கறுப்பவர்களும், கள் பருகக்கூடிய குடிமக்களும் தங்கியிருந்தனர் என்பதனை,

*சீருடைய விழுச் சிறப்பின்*

*விளைந்து முதிர்ந்த விழு முத்தின்*

*இலங்கு வளை, இருஞ்சேரி*

*கட்கொண்டிக் குடிப்பாக்கத்து*

*நற் கொற்கையோர் நசை பொருந (மதுரைக்.134-138)*

என்னும் அடிகள் புலப்படுத்துகிறது. கொற்கை முத்துக்கள் விளங்குகின்ற கடற்பரப்பினை உடையது. இதனை,

*முத்துபடு பரப்பின் கொற்கை முன்துறை (நற்.23)*

என்னும் நற்றிணை அடி சுட்டுகிறது.

**கொற்கையின் வளம்**

நெய்தல் நிலப்பெண்கள் கொற்கைப்பட்டினத்தில் கிடைக்கும் ஒளிப்பொருந்திய முத்துக்களுடன், வலம்புரிச் சங்கினையும் தூவி கடற்தெய்வத்தினை வழிப்படுவர் எனும் செய்தியினை,

*புகழ்மல் சிறப்பின் கொற்கை முன்துறை*

*அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து*

*பழையர் மகளிர் பனித்துறைப் பரவ (அகம்.201:4-7)*

என்ற அகப்பாடல் விளக்குகிறது. மதுரையில் வாழ்ந்த செல்வ மகளிர் கொற்கைத் துறையின்கண் கிடைத்த முத்துகளால் ஆன மாலையை அணிந்திருந்தனர். இதனை,

*கொற்கையம் பெருந்துறை முத்தொடு பூண்டு*

*(சிலம்பு., ஊர்காண் காதை, அடி.80)*

என சிலம்பு கூறுகிறது.

பாண்டியர்கள் அறநெறி வழுவாது காவல் செய்கின்ற பட்டினம் கொற்கையாகும். அதுதுறையில் பெற்ற முத்துகளைப் போன்று பற்களை உடைய தலைவி தலைவனை செல்லவிடாமல் தடுத்து நிற்கும் என தோழி கூறுவதனை,

*மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்*

*கொற்கை அம்பெருந்துறை முத்தின் அன்ன*

*நகைப் பொலிந்து இலங்கும் எயிறு கெழுதுவர்வாய்*

*தகைப்பத் தங்கலர் ஆயினும் இகப்ப (அகம்.27:8-11)*

என்ற பாடலில் மதுரைக்கணக்காயனார் குறிப்பிட்டுள்ளார்.

**மருங்கூர்ப்பட்டினம்**

இத்துறைமுகம் பாண்டியநாட்டின் கிழக்கு கடற்கரையில் அமைந்திருந்தது. மருங்கூர்ப்பட்டினம் ‘‘மருங்கை’’ என்றும் அழைக்கப்பட்டது. மருங்கூர்ப்பட்டினத்தில் பெரும்பொருள் நிலைபெற்று பொலிவுடன் காணப்படும். அப்பட்டினத்தில் உப்பு அதிகம் விளைந்துள்ளதை,

*விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்*

*இருங்கழிப் படப்பை மருங்கூர்ப்பட்டினத்து*

*எல்உமிழ் ஆவணத்து அன்ன (அகம்.227:19-21)*

என்ற அடிகளால் உணரலாம்.

மீன் கடையில் குவிந்து வைத்திருக்கும் இறால்மீன்களை காக்கை கவர்ந்து சென்று மருங்கூர்ப்பட்டினத் துறைமுகத்தில் நிறுத்தி வைத்திருக்கும் கப்பலில் உள்ள பாய்மரத்தில் சென்று தங்கும். இதனை,

*அகல் அங்காடி அசைநிழல் குவித்த*

*பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் காக்கை*

*தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்*

*மருங்கூர்ப் பட்டினத்து அன்ன (அகம்.250:7-10)*

என்ற பாடலில் நக்கீரர் விளக்கியுள்ளார். மருங்கூர்ப் பட்டினத்திற்கு மேற்கில் ஊணூர் என்னும் ஊர் ஈருந்தது. ஊணூர் மதிலை அரணாகக் கொண்டு விளங்கியதை,

*கடிமதில் வரைப்பில் ஊணூர் உம்பர் (அகம்.227:17)*

என்ற அடி உணர்த்துகிறது.

நெல் வளம் மிக்க ஊணூரிடத்தில் முழங்கக்கூடிய கடல் அலைகள் காலைப்பொழுதில் கரை வந்து மோதும் அத்துறையின்கண் வாழும் மகன்றில் பறவைகள் போல தலைவன் தலைவியாகிய நீங்கள் இருவரும் பிரியா வாழ்வினை பெற்றுள்ளீர்கள் என தோழி தலைவனிடம் கூறும்பொழுது ஊணூரின் வளச் சிறப்பை மதுரை மருதன் இளநாகனார்,

*முழங்கு கடல் ஓதம் காலைக் கொட்கும்*

*பழம்பல் நெல்லின் ஊணூர் ஆங்கன் (அகம்.220:12-13)*

என்ற பாடலில் விளக்கியுள்ளார்.

சாலியூர் ஊணரும் மருங்கூரும் சேர்ந்து நெல்லூர் அல்லது சாலியூர் என்று பெயர் பெற்றிருந்த துறைமுகம் இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. இக்கருத்திற்கிணங்க மயிலை சீனி.வேங்கடசாமி நாட்டார் பழந்தமிழர் வாணிகம் என்ற நூலில் சாலியூர் பற்றிக் குறிப்பிடுகிறார். இவ்வூரினை தாலமி என்னும் கிரேக்கர் ''சாலோர்'' என்று கூறுகிறார்.

> ''தாலமி என்னும் கிரேக்கர் கூறுகிற சாலோர் என்பது இந்தச் சாலியூர் ஆகும்.'' (மயிலை சீனி.வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், ப.90)

மதுரைக்காஞ்சி இந்த சாலியூர் துறைமுகத்தை குறிப்பிடுகிறது. ஊணரை தழும்பன் என்பவன் ஆட்சி செய்ததை,

*வாய்மொழித் தழும்பனூணூரன்ன* (புறம்.348)

என புறநானூறும்,

*ஏஎர் தழும்பன் ஊணூர் ஆங்கன்* (நற்.300)

என நற்றிணையும் சுட்டுகிறது. இந்த ஊணூர், மருங்கூர் சேர்ந்த சாலியூரை (நெல்லூர்) பாண்டியன் நெடுஞ்செழியன் கைப்பற்றியதை,

*சீர் சான்ற உயர் நெல்லின*

*ஊர் கொண்ட உயர் கொற்றது*

என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. நெல்வளம் மிகுந்து காணப்படுவதால் காலப்போக்கில் நெல்லினர் எனவும், அதிலும் சாலி என்ற உயர்ந்த சாதி வகையான நெல் அதிகம் காணப்படுவதால் சாலியூர் எனவும் அழைக்கப்பட்டுள்ளது.

பொன் போன்று விளங்கும் சிறந்த பொருட்களை மக்கள் பெற்று பயனடைய ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு நாவாய்கள் சாலியூர் துறைமுகத்தில் வந்து சேரும் என்பதை,

*பொன் மலிந்த விழுப்பண்டம்*

*நாடு ஆர நன்கு இழிதரும்*

*ஆடு இயற் பெரு நாவாய்* (மதுரைக்.81-83)

என்று மதுரைக்காஞ்சி விளக்குகிறது. சாலியூர் கடற்கரைப் பரப்பில் முத்து, சங்கு, வளை, உப்பு, புளி, மீன் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு மரக்கலத்தினைச் செலுத்தும் நாவாய் ஓட்டி மற்றும் யவனர்

போன்ற பிறநாட்டு வணிகர்கள் இந்நாட்டின் அணிகலன்களை எடுத்துச் செல்வதற்கு ஒருங்கு கூடுவர். பிற நாட்டு குதிரைகள் பாண்டிய நாட்டிற்கு வந்து இறங்கும். இங்கு பல பொருட்களும் மிகுவதால் செல்வ வளம் நிலைப்பெற்று திகழும் என்பதை,

*முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தும்*

*. . . . . . . . . . . . . . .*

*விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்*

*வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப*

*நெய்தல் சான்ற வளம்பல பயின்று* (மதுரைக்.315-325)

என்று மதுரைக்காஞ்சி புலப்படுத்துகிறது.

**தொண்டி துறைமுகம்**

சங்க காலத்தில் தொண்டி என்ற பெயரில் இரண்டு ஊர் இருந்தது. இவை இரண்டுமே துறைமுகமாக விளங்கியது. ஒன்று கிழக்கிலும் மற்றொன்று மேற்கிலும் இருந்தது. கிழக்கில் இருந்த தொண்டி பாண்டிய நாட்டைச் சேர்ந்தது. மேற்கில் இருந்த தொண்டி சேர நாட்டைச் சேர்ந்ததாக விளங்கியது. இச்சேரநாட்டுத் தொண்டியைப் பற்றி ஐங்குறுநூற்றில் “தொண்டிப்பத்து” என்னும் தலைப்பில் சேரநாட்டு துறைமுகமான தொண்டியை குறிப்பிட்ட அம்மூவனாரே, பாண்டிய நாட்டுத் தொண்டியைப் பற்றி அகப்பாட்டில் (10) விளக்கியுள்ளார். அப்பாடலில் தொண்டி துறைமுகத்தில் கீழ்த்திசையில் அடிக்கக்கூடிய காற்றினால் அலைகள் மோதி மணல் மேட்டிலுள்ள பகுதியை உடைக்கும். அப்பழைய படகுகளை நீக்கிவிட்டு புதிதாக செய்யப்பட்ட வலையினை கொண்ட பரதவர்கள் உயர்ந்த மணலையுடைய கரைப்பக்கத்தில் ஒதுங்கி கிடக்கும் சுறாமீனை அறுத்து தாமும் தின்று பக்கத்திலுள்ள பலருக்கும் பகுத்துக் கொடுப்பர் என்று தொண்டி பட்டினத்தின் சிறப்பினை,

*. . . . . . . . . கொண்டலொடு*

*குரூஉத்திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்*

*பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்*

*மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கெண்டி*

*மணம் கமழ் பாக்கததுப் பகுக்கும்*

*வளம் கெழு தொண்டி . . . .* (அகம்.10:8-13)

என்னும் அகப்பாடல் எடுத்துரைக்கிறது. இத்தொண்டி துறைமுகம் சேரநாட்டுக்குரியது அல்ல என்பதை உணர்த்த அப்பாட்டில் கொண்டல் காற்று வீசும் கிழக்கு கடல் என்று கூறுகிறார். இக்கருத்திற்கிணங்க மயிலை சீனி.வேங்கடசாமி,

> “கிழக்கு கடலிலிருந்து வீசுகிற கடற்காற்றுக் கொண்டல் காற்று என்பது பெயர். இந்தத் தொண்டி கிழக்குக் கடற்கரையிலிருந்து என்பதைக் கொண்டல் காற்று வீசுகிற தொண்டி என்று கூறுவதிலிருந்து அறிகிறோம். இந்தத் தொண்டி பாண்டி நாட்டில் இப்போதைய இராமநாதபுர மாவட்டத்தில் இருந்தது என்று தோன்றுகிறது” (மயிலை சீனி.வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், ப.85)

என்று எடுத்துரைக்கிறார்.

குணதிசையிலுள்ள தொண்டிப் பத்தில் அரசர்கள் திறையாக கொடுத்த அகில், பட்டு, சந்தனம், சாதிக்காய், தக்கோலம் முதலியன சேர்ந்த தொகுதியின் வாசமும் கருப்பூரம் ஆகியவற்றின் மணத்தை கீழ்க்காற்று சுமந்து கொண்டு பாண்டியனுடைய மதுரையில் புகுந்தது என்பதை,

*வங்க ஈட்டத்துத் தொண்டி யோரிட்ட*
*அகிலுந் துகிலும் ஆரமும் வாசமும்*
*தொகு கருப்பூரமுஞ் சுமந்துடன் வந்த*
*கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்*

(சிலம்பு., ஊர்காண் காதை, அடி.107-110)

என்று சிலம்பு சுட்டுகிறது.

**குமரி**

இத்துறைமுகம் பாண்டிய நாட்டின் தெற்கே குமரிக் கடலில் இருந்தது. இது கன்னியாகுமரி என்று அழைக்கப்பட்டுள்ளது. புண்ணிய தீர்த்தமாகவும் இருந்த பிற்காலத்தில் கங்கையில் நீராடினவர் குமரிக்கு வந்து நீராடி செல்வது வழக்கமாக இருந்தது. இத்துறைமுகத்தை பற்றி தாலமி, பெரிப்புளூஸ் என்ற கிரேக்கர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் குமரித் துறைமுகத்தை கொமரா, கொமராய், கொமரியா என்றெல்லாம் கூறியுள்ளனர். பின்பு கடல்கோளால் இத்துறைமுகம் அழிவுற்றது. இக்குமரித்துறையை,

*குமரியம் பெருந் துறை யயிரை மாந்தி* (புறம்.67)

என புறநானூறும்,

*குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து* (சிலம்பு.128)

என சிலம்பும் குறிப்பிடுகிறது.

**விழிஞம்**

இத்துறைமுகம் பாண்டிய நாட்டிலுள்ள ஆய்நாட்டில் இருந்தது. ஆய்நாடு என்பது பொதிகையை சூழ்ந்திருந்த பகுதியாகும். இதனை ஆட்சி செய்த ஆய மன்னர்கள் பாண்டியருக்குக் கீழடங்கிச் சிற்றரசராக இருந்தார்கள். இத்துறைமுகத்தை தாலமி “இலங்கொன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

> “இலங்கொன் (Elankon) என்னும் துறைமுகப் பட்டினத்தைத் தாலமி என்னும் யவனர் கூறியுள்ளார். இது ஆயோய் (ஆய்) நாட்டில் இருந்ததென்று கூறுகின்றார்” (மயிலை சீனி.வேங்கடசாமி, பண்டைத் தமிழக வரலாறு, ப.97)

என்று மயிலை சீனி.வேங்கடசாமி குறிப்பிடுகிறார். விழிஞம் துறைமுகம் மிகப் பழமையான சரித்திரப் புகழ்ப்பெற்ற துறைமுகப்பட்டினமாகும்.

**முடிவுரை**

சங்க கால பாண்டிய நாட்டு கொற்கை துறைமுகம் சிறப்பு பெற்றிருந்தது. அக்கொற்கையை சங்ககால புலவர்கள் தம் பாடல்களில் மிகுதியாக சுட்டிக் காட்டியுள்ளனர். மருங்கூர்ப் பட்டினம் சிறந்த துறைமுகமாக விளங்கியுள்ளது. அதன் அருகிலேயே ஊணூர் என்னும் ஊரும் இருந்துள்ளது. இவ்விரண்டு ஊர்களும் சேர்ந்து சாலியூர், நெல்லினூர் பெயர் பெற்றிருந்ததை மதுரைக்காஞ்சி குறிப்பிடுவதாக மயிலை சீனி.வேங்கடசாமி குறிப்பிட்டுள்ளார்.

சேரர்களது தொண்டி துறைமுகத்தை பாடிய அம்மூவனாரே பாண்டியரது தொண்டி துறைமுகத்தையும் பற்றி பாடலில் பதிவு செய்துள்ளார். சங்க காலத்தில் குமரி, விழிஞம் போன்ற துறைமுகங்கள் வாணிகத்தில் பெயர் பெற்றிருந்தது. பின்பு அக்காலத்தில் உண்டான கடல்கோளால் அழியபட்டு விட்டது.

**துணைநூற் பட்டியல்**

இராகவன், அ., *கோநகர் கொற்கை*, அமிழ்தம் பதிப்பகம், சென்னை, 2011.

கோவிந்தன், கா., *தமிழர் வாணிகம்*, மலர் நிலையம், சென்னை, 2018.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.). *சங்க இலக்கியம் — எட்டுத்தொகை — பரிபாடல்* (உரையாசிரியர்: புலியூர்க் கேசிகன்). சென்னை: சாரதா பதிப்பகம், 2011.

சாமிநாதையர், உ.வே. (உ.ஆ.). *கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்* (நிழற்படப் பதிப்பு). தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 1984.

சாமிநாதையர், உ.வே. (கு.ஆ.). *பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்.* தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, மறுபதிப்பு, 1986.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.). *சங்க இலக்கியம் — எட்டுத்தொகை — ஐங்குறுநூறு மூலமும் உரையும்.* சென்னை: சரண் புக்ஸ், 3 ஆம் பதிப்பு, 2021.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.). *சங்க இலக்கியம் — எட்டுத்தொகை: குறுந்தொகை தெளிவுரை.* சென்னை: கங்கை புத்தக நிலையம், 2010.

புலியூர்க் கேசிகன் (உ.ஆ.). *சங்க இலக்கியம்: எட்டுத்தொகை — அகநானூறு.* சென்னை: சாரதா பதிப்பகம், 11 ஆம் பதிப்பு, 2021.

வேங்கடசாமி, மயிலை சீனி., *பழங்காலத் தமிழர் வாணிகம்,* சென்னை, 1991.

## *References*

*Ragavan, A., **Konagar Korgai**. Chennai: Amizhdham Pathippagam,* 2011.

*Govindhan, Ka., **Tamilar Vaanigam**, Chennai: Malar Nilayam,* 2018.

*Goumareeswari, S. (Editor). **Sangam Ilakkiyam — Ettuthokai — Paripadal** (Urai Aasiriyar: Puliyur Kesigan). Chennai: Saratha Pathippagam,* 2011.

*Saminathaiyar, U.Ve. (Editor). **Kalithokai Moolamum Nachchinarkiniyar Uraiyum** (Nizhalpadha Pathippu). Thanjavur: Tamil University,* 1984.

*Saminathaiyar, U.Ve. (Editor). **Patthuppaattu Moolamum Nachinarkiniyar Uraiyum**. Thanjavur: Tamil University Veliyeedu, Reprint,* 1986.

*Puliyur Kesigan (Editor). **Sangam Ilakkiyam — Ettuthokai — Ainkurunuru Moolamum Uraiyum**. Chennai: Saran Books, 3rd Edition,* 2021.

*Puliyur Kesigan (Editor). **Sangam Ilakkiyam — Ettuthokai: Kurunthokai Thelivurai**. Chennai: Gangai Putthaga Nilayam,* 2010.

*Puliyur Kesigan (Editor). **Sangam Ilakkiyam: Ettuthokai — Akananuru**. Chennai: Saradha Pathippagam, 11th Edition,* 2021.

*Venkadasami, Mayilai Seeni., **Pazhankala Tamilar Vaanigam**, Chennai,* 1991.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com